RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s103

OPEN ACCESS

# சிலம்பில் சமயம் சார்ந்த நம்பிக்கைகள்

ரா. ராமேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, இதயா மகளிர் கல்லூரி, சருகனி, சிவகங்கை-630411, தமிழ்நாடு, இந்தியா

# Religious Beliefs in "Silambu"

R. Rameswari [a, *]

[a] Department of Tamil, Idhaya College for Women, Sarugani, Sivaganga-630411, Tamil Nadu, India.

* Corresponding Author: ramaakkdi@gmail.com

Received: 05-09-2021
Revised: 30-05-2022
Accepted: 07-06-2022
Published: 10-08-2022

## ABSTRACT

Man is not only an animal that eats, dresses, and lives, but also an animal with religious knowledge. Only man, unlike animals, has discovered a superhuman power to protect himself from threatening evil and to obtain what he desires. How the ancient people came to think about religion is an unending debate among anthropologists and realists. He mentions that scholars like "Periluite" and others like "Thurkiyam" think that the fear that appeared in the people is the reason for the emergence of religion. The text says that there was a principle behind the fact that Veeduperu (Salvation), Meyporul (Reality), Illatthuravu (Give up material life), Vethanambikkai (Belief in Vedas), Nadukal Vanakkam (Salutation to Hero Stone), the number three, Veda and Velvi (Veda and Sacrifice), are considered to be religious as well as subjected to scrutiny and appropriate that being religious is wise. Therefore, Ilango has also indicated the state of meditation of the saints of Jainism. It can be seen in three places in Silapathikaram that the people of that time gave importance to the number three in their lives. Countless sounds are heard in the city of Madurai. Then it can be known that the Vedas have been used in a faith-based manner by the fact that they are recited and the sound is heard. During the Silapathikaram era, virtuous Brahmins lived all over Tamil Nadu. They recited the Vedas, made prayers, and performed their six types of activities, such as reciting, desiring, conducting prayers, and offering gifts. The Epic emphasises the excellence of the Vedas by praising the maadalan. "Gods are peerless warriors who do good." According to the Greek philosopher, Euchemerus, after the deaths of these heroes, the people began to worship them as gods. But he also accepts the worship of dead ancestors as the root cause of religion. Despite these differences of opinion, religion is a very deep subject that resonates with man's deep experiences. A place where the thoughts and dreams of billions of minds flash, explaining the religious beliefs of the Silapathikaram period.

**Keywords:** Tholkappiyam, Aganaanooru, Purananooru, Kalothogai

## முன்னுரை

கதையின் வாயிலாகச் சமய உண்மைகளையும் உய்யும் வழிகளையும் காட்டும் வழக்கத்தைத் தமிழில் தோற்றுவித்த பெருமை சிலப்பதிகாரத்தைச் சேர்ந்தது. “இளங்கோவடிகள் தீட்டிய சிலப்பதிகார காலத்தில் எல்லாச் சமயங்களும் தமிழகத்தில் உலவின. சிலம்பு எழுந்த காலத்தை ஒரு மாறுகாலம் என்கிறார்”. தமிழகத்தில் சைவம் வைணவனம் என்ற வைதிக சமயங்களும், சமணம் புத்தம் என்ற புறச் சமயங்களும் பரவியிருந்ததைக் காணுகின்றோம். புகார் மதுரை போன்ற பெருநகரங்களில் நால்வகைச் சமயத்தவருடைய கோவில்களும் அடுத்தடுத்தே அமைந்திருந்தன.

அரசர்கள் பெரும்பான்மையும் வைதீக சமயத்தைச் சார்ந்தே இருந்தனர் எனினும் அவர்களிடம் பிற மத வெறுப்பு என்பது சிறிதும் இல்லை. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தாரும் பல சமயத்தைச் சார்ந்திருந்ததையும் சிலம்பு காட்டுகிறது எனினும் அதன் நிமித்தம் அவர்களுக்குள் உளவேறுபாடு உண்டானதில்லை. சேரன்செங்குட்டுவன் சைவன். இவர் தம்பி இளங்கோவடிகள் சமணர். செங்குட்டுவன் எனினும் வைணவத்திடம் வெறுப்புக் கொள்ளவில்லை. கோவலன் மதுரைக்கு போகும்போது முதலில் மணிவண்ணன் கோவிலையே வலம் வந்தான். பின்பு புத்தரின் அறிவுரைகளை ஏற்றான். அருகனை வணங்கும் கவுந்தியடிகள் அடைக்கலமாகத் தந்த கண்ணகியைத் திருமாலிடம் அன்பு கொண்டுள்ள இடையர்குல மாதரி ஏற்றுப் பாராட்டைப் பெறுகின்றாள். இத்தகைய அறவழியும் பக்திவழியும் இணைகின்ற பொதுநிலையைச் சமயத் துறையில் காணமுடிகிறது. சிலப்பதிகாரம் தலையாயக் காப்பியமாகக் கொண்டாடப்படுவதற்கு சமயப் பொதுமறையே காரணமாகிறது.

## வீடுபேறு

வீடு என்பது முத்திநெறிகளைக் குறிக்கும். “அந்நிலை மருங்கின் அறம் முதலாகியமும் முதல்பொருட்கும் உரிய என்ப” என்ற தொல்காப்பிய நூற்பா நூல்கள் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பொருள்களையே உரைப்பன என்று கூறுகின்றது (Sanmugam pillai, 1996).

வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின் அதனை நீக்கியே வைத்தனர். எனவே அறம், பொருள், இன்பம் மூன்றைப் பற்றி மட்டுந்தான் நூல் முடியும் என்பது பழந்தமிழர் கொள்கை (Chidambaranar Samy, 2008a).

சமண புத்தமதங்கள் தமிழகத்தில் பரவித் தழைத்து நின்ற காலத்தில் வீட்டைப் பற்றியும் எழுதத் தொடங்கினர். வீடு எனப்படும் முத்திநெறிகளைப் பற்றிய நூல்களின் எழுச்சி இவ்விரு சமயத்தினருக்குப் பின்பே தமிழகத்தில் தலையெடுத்தது.

“அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே”

என்று பின்னாளில் எழுந்த நன்னூற் சூத்திரம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அடைவதற்கு வழிகாட்டுவதே நூல் ஆகும் என்னும் கருத்தைக் கூறுகிறது.

“கோநகர் பிழைத்த கோவலன் - தன்னொடு

வானஊர்தி ஏறினாள் - மாதோ”

சிலப்பதிகாரத்தின் இறுதியில் கோவலனும் கண்ணகியும் விண்ணுலகம் சென்றதாக கூறப்படுகிறது. இதுவே வீடுபேறு என்பர் துறவறத்தில் இருந்தும் வீடுபேறு அடைவர் (Venkatasamy Nattar, 2018).

இல்லத்தில் இருந்தும் வீடுபேறு அடைவர் என்பதையே சிலம்பு குறிப்பிடுகின்றது. இதன் மூலம் சிலம்பில் வீடுபேறு என்னும் கருத்து இருந்துள்ளமையை அறியமுடிகிறது. தற்போதைய காலத்திலும் மக்கள் மனதில் மோட்சம், நரகம் என்ற நம்பிக்கை இருப்பதை அறியமுடிகிறது.

## மெய்ப்பொருள்

சைனசமயத்தார் தங்கள் அறநெறிகளை மெய்ப்பொருள் என்று அழைத்து வந்தனர். இவ்வறங்களை உரைக்கும் அறப்பொர்களை மெய்வகை உணர்ந்தோர் என்பார் இளங்கோ. ஆகாய சாரிகளாகிய சாரணப்பரமேட்டிகளை (ஒருவகைத் துறவியர்கள்) மெய்வகை உணர்ந்தவிழுமியோர் என்பார். “கோவலன் சென்று கொள்கையினிருந்த காவுந்திஜயையைக் கைதொழுதேத்தி” என்ற அடியில் கொள்கையினிருந்த என்பதற்கு அடியார்க்கு நல்லார் தியானத் தோடிருந்தமை என்று உரைகூறுகின்றார் (Venkatasamy Nattar, 2018). அடிகள் சிறந்த சைனத் துறவி. எனவே சைனத் துறவிகளின் தியான நிலையினையும் இளங்கோ உணர்த்தியுள்ளார். இதன் மூலம் அறநெறியைப் பின்பற்றுபவன் உயர்ந்தவனாக மதிக்கப்பட்டுள்ளான் என்பதை உணர்த்துகிறது.

## இல்லறத் துறவி

கிறித்துப் பிறப்பிற்குச் சில நூற்றாண்டுகட்கு முன்பே சமணமும் புத்தமும் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டனவெனச் சாசனங்களால் அறியலாம் என்று குறிப்பிடுகிறார். கொல்லாமையைப் போற்றிப் பெண்மையை வெறுத்த சமண பௌத்தக் கோட்பாடுகளும் கொள்கைகளும் போரையும் காதலையும் போற்றி வாழ்ந்த சங்ககாலத் தமிழ் மக்களைக் கவரமுடியவில்லை. அதற்குப் பின்பு இல்லறத்தையும் இணைத்துச் செல்லும் நோக்கமுடையதாக இம்மதங்கள் மாறத் தொடங்கின. சமணரில் விரதங்காக்கும் இல்லறத்தார் சாவகர் எனப்பட்டனர். இவர்கள் உலக நோன்பிகள் என்றும் அழைக்கப்பட்டனர். குற்றங்களையெல்லாம் களைந்த கோவலன் இச்சாவகநெறியைப் பின்பற்றியே இல்லற ஒழுக்கங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளுகின்றான்.

“சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்”

என்று காட்டும் சிலப்பதிகாரச் செய்திக்கு உரைகூறும் அருட்பதவுரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் அடிகள் என்பது கோவலனாரையே என்றும் சாவக நோன்பிகள் என்றதால் இரவுண்ணா நோன்பிகள் என்றும் கூறுகின்றார்கள் (Venkatasamy Nattar, 2018). இல்லறத்தில் இருந்தே துறவரக் கொள்கைகளான தூய நெறிகளைக் கைக்கொள்ளுவதை அன்றைய சமுதாயம் விரும்பி வரவேற்ற நிலையை இது உணர்த்துகின்றது.

“காமம் சான்ற கடைக்கோட் காலை

ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”

என்று தொல்காப்பியர் கூறும் நெறியையே இது வற்புறுத்தி நிற்பதைக் காணமுடிகிறது (Sanmugam pillai, 1996). இல்லறம் இரும்புச் சுரங்கம் பொற்சுரங்கம் பொற்சுரங்கத்தினின்று பொன்னை எடுக்க வேண்டுமாயின் இரும்பு இன்றியமையாதது.

எனவே இல்லறமாகிய இரும்புச் சுரங்கத்தினின்று இரும்பை எடுத்துக் கொண்டே பொற்சுரங்கத்தில் இறங்கவேண்டும் குறிப்பிடுகிறார். இதுவே இங்கோவடிகள் காலத்திலும் கொள்கையடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டது.

சிராவகர் (கேட்போர்) அல்லது பொதுநிலை மக்கள் மற்றது சமயவாணர். இச்சமயவாணர்களிடையே ஐந்து பிரிவினர் இருந்தனர். அவர்கள் பஞ்சபரமேட்டிகள் எனப்படும்.

அருகம், சித்தர், உபாத்தியாயர், குருமார், சாதுக்கள் ஆவர். இவர்கள் கோயில்களின் அருகிலும் பொது வீதிகள் குறுக்கிட்டுச் செல்லும் திறந்த சதுக்கவெளிகளிலும் உரைமேடைகள் அமைத்து அவற்றிலிருந்து மக்களுக்கு அறவுரை தந்தனர்.

ஆண் பெண் துறவியர் இரு சாராரும் ஒரு கொள்கலம் நீர்க்கலம் தொங்கவிட்ட ஒரு நூல்கயிறு இருக்குமிடத்திலும் படுக்குமிடத்திலும் ஊரக்கூடிய நுண்ணுயிர்களைக் கொல்லாமல் அப்புறப்படுத்திக் காப்பதற்குரிய ஒரு மயிற்பீலிக் கொத்து ஆகியவற்றைத் தங்களுடன் வைத்துக்கொண்டிருந்தனர். ‘பஞ்சமந்திரம்’ என்ற பெயருடைய ஐந்தெழுத்துக்கொண்ட வழிபாட்டு மொழிகளை அவர்கள் ஓயாது உருவிட்டு வந்தனர்.

## வேத நம்பிக்கை

வைதிகச் சமயங்களான சைவமும் வைணவமும் வேதங்களைப் பெரிதும் குறிக்கோளாகக் கொண்டு திகழ்ந்தன. மதுரை நகரில் வைகறைப் பொழுதில் கேட்ட பல்வேறு ஓசைகளில் “நான்மறை அந்தனர் நவின் ஓதையும்” (Venkatasamy Nattar, 2018) இதனை,

"காதில்

முனைநா பூசை அல்ல தீயாவதும்

முனிநா ஓசைகேட்டதும் இலனே"

என்று கூறிப் பாண்டியன் நகரைப் பாராட்டுகின்றனர் (Venkatasamy Nattar, 2018).

சிலப்பதிகாரக் காலத்தில் நல்லொழுக்கமுடைய அந்தணர்கள் தமிழ்நாடெங்கும் வாழ்ந்துவந்தனர். அவர்கள் வேதம் ஓதினர், வேள்விகள் செய்தனர், தங்களுக்குரிய ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழில்களையும் ஆற்றிவந்தனர். மாங்காட்டு அந்தணன் மாமுதுமறையோன், மாமறையாளன் தீத்திறம் புரிந்தோன், மாமறை முதல்வன், மாமறையோன், நலம்புரிகொள்கை, நான்மறையாளன் என்றெல்லாம் வேதமுறைப்படியும், வேள்வி முறைப்படியும் பாராட்டப்படுகின்றான். மாடலனைப் பற்றி கூறுகின்றபோது,

"தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து

நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை

மாமறை முதல்வன் மாடலன் என்போன்

என்று சிலப்பதிகார ஆசிரியர் கூறுகிறார் (Venkatasamy Nattar, 2018).

வேதங்களைக் கல்லாதவர்கள் அந்தணர் என்றோ, வேதியர் என்றோ குறிக்கவில்லை.

"வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்

புரிநூல் மார்பர் உறையதிச் சேர்ந்து"

என்று கூறி அவர்களை மறைநூல் ஒழுக்கத்தை உழுவவிட்ட பூனூல் பூண்டோர் என்றே குறிப்பிடுகிறார் (Venkatasamy Nattar, 2018).

சமண புத்த மதங்கள் கொண்டிருந்த ஊழ்வினை மறு, பிறப்பு, தான தர்மம், வாய்மை, கொள்ளாமை, புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை, பெரியாரைத் துணைகோடல், காமத்தின் தீமை, பிறர்மனை நயவாமை, புறஞ்சொற் கூறாமை போன்ற அறங்களை வைதீக சமயங்களும் வலியுறுத்திவந்தன. மாடலமறையோன் செங்குட்டுவனைச் சந்தித்து பேசும் அறவுரைகள் யாவும் சைன சமயக் கொள்கைகளை ஒத்தே விளங்குகின்றன.

அவன் செங்குட்டுவனுக்கு யாக்கைநிலையாமை, இளமைநிலையாமை முதலிய அறங்களை வலியுறுத்தி வேள்வி புரியக் கூறுகின்றான் என்று இச்செய்தியை சிலப்பதிகாரப் பழக்கவழக்கங்கள் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

## நடுகல் வணக்கம்

பண்டைத் தமிழ் மக்களிடம் வேரூன்றியிருந்த வழிபாடுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது இறந்தார்க்கு நடப்பட்ட கற்களை வணங்கும் நெறியாகும். போரில் இறந்தார்க்கு வீரர்களின் நினைவினைப் போற்றும் வண்ணம் அவர்களின் பெயரையும் பெற்ற வெற்றியையும் அவர்களின் பெருமைகளையும் பொறித்துக் கல் நட்டு வணங்கும் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்துள்ளது. வெட்சித் திணையில் ஒரு கூறாக இதனை அவர் குறித்துள்ளார்.

காட்சி கால்கொள் நீர்ப்படை நடுகல் பெரும்படை வாழ்த்து என்று ஆறு நிலைகளை தொல்காப்பியர் (புறத்தினை, 5) குறித்தள்ளமையை காணலாம். இதனையொட்டியே சிலப்பதிகார ஆசிரியர் தமது வஞ்சிக் காண்டத்தை உருவாக்கியுள்ளமையை அறியமுடிகிறது.

இறந்தார்க்கு கல்நட்டு வழிபடும் முறை கி.பி.11 ஆம் நூற்றாண்டுவரை இருந்துள்ளது என அறிஞர்கள் கண்டுள்ளனர் என்று சாமிசிதம்பரனார் சிலப்பதிகார தமிழகம் என்ற நூலில் சுட்டுவார். சிலப்பதிகாரத்திலும் செங்குட்டுவன் கண்ணகிக்கு கல் எடுத்து வழிபாடு செய்ததும் நடுகல்

வழிபாட்டையே சுட்டுகின்றது. சங்க இலக்கியத்திலும் நடுகல் வழிபாடு பற்றிய பதிவுகள் புறநானூறு 226, அகநானூறு 343, ஐங்குறுநூறு 352, பட்டினப்பாலை 78-79 போன்றவற்றில் உள்ளது. இவ்வழிபாடும் மக்களிடம் இருக்கும் நம்பிக்கையைக் காட்டுவதாக உள்ளது. அவை ஒரு பெண் தனக்கு நல்ல விருந்தினர் வரவும், கணவன் நல்ல பகையைப் பெறவும் வேண்டுகிறாள். இது பற்றிய செய்திகள் அகநானூற்றிலும் புறநானூற்றிலும் வருகின்றன.

"ஊர்நனி யிறந்த பார்முதிர் புறந்தலை

ஓங்குநிலை வேங்கை ஒளளிணர் நறுவீப்

போந்தையந் தோட்டில் புனைந்தனர் தொடுத்துப்

பல்லான் கோவலர் படலை சூட்டக்

கல்லாயினையே கடுமான் தோன்றல்"

இக்கற்களில் வீரனுடைய பெயரும் பீடும் எழுதப்பட்டன. அணிமயிற் பீலியும் மலர்மாலைகளும் சூட்டப்பட்டன (Avvai Duraisamy pillai, 1947).

"கிடுகு நிரைத்து எஃகூன்றி

நடுகல்லின் அரண்போல"

நடுகற்கள் அமைந்த இடத்தைச் சுற்றி வேலை நட்டுக் கேடயங்களையும் நிறுத்திவைத்தனர் என்பதை இப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது (Chidambaranar Samy, 1988b).

இவைகள் யாவும் மனிதனின் ஒருவகை நம்பிக்கை அடிப்படையில் அமைந்தவை. சிலப்பதிகாரத்திலும் நடுகல் பற்றிய பதிவு அமைந்துள்ளது.

"பேர்இமயக் கல் சுமத்திப்

பெயர்ந்து போந்துநந்த கொள்கையின்

கற்கால் கொளிளினும் கடவுள்ஆகும்"

இவை நடுகல் வழிபாட்டைச் சார்ந்தவையாகும். நடுகல் வழிபாடு பழைய காலம் தொட்டே இருந்துள்ளமையை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. தற்போதும் நீத்தார் வழிபாடு நம்மிடம் இருப்பதை பார்க்கிறோம் (Venkatasamy Nattar, 2018).

## மூன்று என்ற எண் மீது கொண்டிருந்த நம்பிக்கை

அக்கால மக்கள் மூன்று என்ற எண்ணுக்குத் தங்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுத்துவந்ததைச் சிலப்பதிகாரத்தின் மூன்று இடங்களில் காணலாம்.

செங்குட்டுவன் தான் கட்டிய பத்தினிக் கோட்டத்தை மூன்றுமுறை வலம் வந்து வணங்குகிறான். கண்ணகி மதுரையை எரிக்க முன் மூன்று முறை மதுரையை வலம்வருகிறாள். மாங்காட்டுமறையோன், கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் ஆகியவர்களைப் பார்த்து திருமாலை மனத்துள் நினைத்து மூன்றுமுறை அவன் எழுந்தருளியிருக்கும் மலையை வலம் செய்யவேண்டி வலியுத்துகிறான். இவ்வாறு எல்லாம்வல்ல இறைவனை வழிபடுதல் மதுரையை எரிக்கும் முன் வலம்வருதல் ஆகிய ஒவ்வொரு செயலுக்கும் மூன்றுமுறை வலம் வருவதைப் பார்க்கிறோம்.

சங்ககாலத்தில் பார்க்கமுடியவில்லை. அக்காலத்தில் வளர்ச்சியடைந்திருந்த சமண பௌத்தச் சமயங்களில் செல்வாக்குக் காரணமாக இருக்கலாம். சமண சமயத்தினர் தங்களுடைய இறைவனை மூன்று குடைக்கீழ் இருப்பவராக எண்ணி வருகின்றனர். ஆகவே சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கால் வைதீக சமயத்தைச் சார்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கையின் மூன்று என்ற எண்ணிற்கு முக்கியத்துவம் கொடுத்துவந்தனர் என்பதை அறியமுடிகிறது.

## வேதமும் வேள்வியும்

சங்ககாலத்திலேயே தமிழகத்தில் வடமொழி வேதங்கள் வழங்கிவந்தனர். வேதங்கள் கற்ற மறையொர்கள் மக்களால் பாராட்டப்பட்டுவந்தனர். நாட்டிலே வேதமுறைப்படி வேள்விகள் நடைபெற்றுவந்தனர். மன்னர்களும் மற்றவர்களும் வேதவேள்விகளை ஆதரித்துவந்தனர். இவ்வுண்மையைச் சங்க இலக்கியங்களிலே காணலாம்.

பல்யானைச் செல்கெபுகுட்வன் என்னும் சேரமன்னன் வேள்விகள் பல செய்தான். தன்னைப் பாடிய பாலைக்கௌதமனார் என்னும் புலவர் பொருட்டுப் பத்துப் பெரிய வேள்விகள் செய்தான். பத்தாவது வேள்வியைச் செய்துகொண்டிருக்கும் போது கௌதமனார் அவர் பத்தினியும் சுவர்க்கம் அடைந்தனர். இச்செய்தி பதிற்றுப்பத்திலே மூன்றாம் பத்தின் பதிகத்தில் காணப்படுகின்றது. இவ்வரலாற்றைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

"பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்ற பாண்டிய மன்னனைப் பற்றிப் புறநானூற்றில் 6, 9, 12 ஆகிய பாடல்களில் காணலாம். இவன் பல யாகங்களைச் செய்த பாண்டியன். சிலப்பதிகார காலத்திலே வேதங்கள் ஓதப்பட்டுவந்தன" என்று கூறுகிறார் (Chidambaranar Samy, 1988c). வேதமறிந்த மறையோர்கள் வாழ்ந்துவந்தனர்.

வேதமறிந்த மறையோர்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் வேதம் ஓதினர். நாட்டு நலன் கருதி வேள்விகள் செய்தனர். மன்னர்களும் மக்களும் அறநெறிகளைப் போதித்து வந்தனர். உயர்ந்த ஒழுக்கம் உள்ளவர்களாய்ப் பலரும் போற்றி வாழ்ந்தனர்.

"மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ

நான்மறை மரபின் தீமுறை லுருபால்"

மிகுந்த முதுமையுடைய முதல்வனாகிய நான்முகனால் அருளப்பட்டவை உண்மையில் தவறாதவை நான்காக அமைந்த ரிக், யசுர், சாம, அதர்வணம் இவ்வேதங்களில் சொல்லப்பட்ட முறைப்படி வேள்விகள் ஒரு பக்கம் நடைபெற்றன (Venkatasamy Nattar, 2018). காவிரிப் பூம்பட்டினத்திலே யாகங்கள் நடைபெற்றதை இவ்வடிகள் காட்டுகின்றன.

"மழைக்கரு உயிர்க்கும் அழல்திகழ் அட்டில்

மறையோர் ஆக்கிய ஆவுதி நறும்புகை

இறை உயர்மாடம் எங்கணும் போர்த்து

மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்றும்

மங்கல மறையோர் இருக்கையும்"

மழைக்குக் கருவையுண்டாக்கும் யாகத் தீவிளக்கும் வேள்விச்சாலை அவ்வேள்விச் சாலையிலே வேதியர்கள் தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுக்கும் வேள்வித் தீயில் நறும்புகை எழும் இப்புகைமிக்க உயர்ந்த மாளிகைகளை மேகத்தால் சூழப்பட்ட மலைகள் போலக் காணப்படும் (Venkatasamy Nattar, 2018). மறையோர்கள் வாழும் இவ்வாறு காட்சியளிக்கும். கவுந்தி, கண்ணகி, கோவலன் மூவரும் மதுரைக்குச் செல்லும் வழியிலே இத்தகைய ஊர்களைக் கண்டனர் என்று கூறப்படுகின்றது. 'நான்மறை அந்தணர் நவின்ற லுதையும்' (புறஞ்.141) நான்கு வேதங்களையும் அறிந்த அந்தணர்கள் அவ்வேதங்களைச் சுருதி குன்றாமல் நவில்கின்றனர். வைகறைப் பொழுதில் இவ்வோசை கேட்கின்றது. விடியற் காலத்திலே மதுரை நகரத்திலே என்னென்ன ஓசைகள் கேட்கின்றன என்பதைச் சிலப்பதிகார ஆசிரியர் குறிப்பிடுகிறார். அப்பொழுது வேதம் ஓதும் ஓசையும் கேட்கின்றது என்பதைக் குறிப்பிடுகிறார். இவற்றின் மூலம் வேதங்களை நம்பிக்கைச் சார்ந்த முறையில் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை

ஆன்மீகச் கொள்கை அவரவரது தனியான நம்பிக்கையைப் பொறுத்தது. அதனால் வேற்றுமை காணுகின்ற தன்மை அக்கால மக்களிடையே வளரவில்லை. ஒவ்வொருவரும் அவரவரு விருப்பப்படி எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம் என்ற பொதுநிலையைக் காட்டுகிறது. தன் சமயப் பற்றில் உரிமையும், பிற சமயத்தவரோடு இனிய உறவும் கொண்டு ஒரே தமிழினத்தவராக வாழ்தல் வேண்டும் என்பதே இளங்கோவடிகள் சமயத்துறையினர்க்குத் தெரிவிக்கும் செய்தியாகும். சைவ சமயம் இல்லறம் துறவறம் ஆகிய இரண்டுபேரறங்களையும் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவற்றோடு மக்கள் கதித் துன்பம், விலங்குகதி துன்பம், நரகத்தித் துன்பம், வேதகதித் துன்பம் ஆகிய நாற்கதித் துன்பங்களையும் தானம், தவம் ஆகிய பயன்களையும் விளக்குகின்றது. சமண பௌத்த சமயங்களின் செல்வாக்கால் வைதீக சமயத்தைச் சார்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கையின் மூன்று என்ற எண்ணிற்கு முக்கியத்துவம் கொடுத்துவந்தனர் என்பதை அறியமுடிகிறது. மேலும் ஊழ்வினைச் செயலைப் பற்றிப் பேசுற்காலை வினையைச் செலுத்தும் கர்த்தா ஒருவர் உண்டெனும் சைவ சமயக் கோட்பாடிற்கு மாறாக வினையானது. தற்செய்த கிழவனைத் தானே வந்தடைகின்றது. ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்ற கொள்கையினை நிலைநிறுத்துகின்றது. சிலப்பதிகாரத்தின் இறுதியில் கோவலனும் கண்ணகியும் விண்ணுலகம் சென்றதாகவே கூறப்படுகிறது. இதுவே வீடுபேறு என்பர். துறவறத்தில் இருந்தும் வீடுபேறு அடைவர், இல்லறத்தில் இருந்தும் வீடுபேறு அடைவர் என்பதையே சிலம்பு குறிப்பிடுகின்றது. இதன் மூலம் சிலம்பில் வீடுபேறு என்னும் நம்பிக்கை சார்ந்த கருத்து இருந்துள்ளமையை அறியமுடிகிறது. சமயம் சார்ந்த நம்பிக்கைகளான இவை அனைத்துமே இம்மானுட இனத்தை நல்வழிப்படுத்தப் பயன்படுபவை. ஆதலால் நம்பிக்கை ஆயினும் போற்றுவதற்குரியவையே ஆகும்.

## References

Avvai Duraisamy pillai, S., (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Azhagu Krishnan, P., (1988) Silapathikaram Kattum Samuthayam Panpadu Samuthayam Varalaru, Ainthinai pathippagam, Chennai, India.

Chidambaranar Samy, (2008a) Pazhantamilar Vazhvum Valarchiyum, Manikavasagar pathippagam, Chennai, India.

Chidambaranar Samy, (2008b) Ettuthogaiyum Tamilar Panpadum, Arivu publications, Chennai, India.

Chidambaranar Samy, (2008c) Silapathikaram, Arivu publications, Chennai, India.

Jeyabal, R., (2004) Agananooru, New Century Book House, Chennai, India

Sanmugam pillai, M., (1996) Tolkappiyam, Mulai nilaiyam, Chennai, India.

Venkatasamy Nattar, Na.Mu., (2018) Silapathikaram Moolamum Uraiyum, 1st Edition, Gowra Agency, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License